செ.வெ.எண்.284 நாள்.30.04.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 38 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 95 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி விழுக்காடு காட்டிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி/முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.04.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400/– மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், கடையநல்லூர் வட்டத்தைச் சார்ந்த 12 பயனாளிகளுக்கு தலா ரூ.30,000/– மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், திருவேங்கடம் வட்டத்தைச் சார்ந்த ஒரு மாற்றுத்திறனாளிக்கு பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 சதவீதம் தேர்ச்சிப் பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நல்லம்மாள்புரம் டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.1 இலட்சம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், நல்லம்மாள்புரம் அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.45 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், கடம்பன்குளம் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.45 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், துலுக்கர்பட்டி அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.20 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், வலசை அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.30 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், முன்னீர்பள்ளம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.30 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகையினையும், பாபநாசம் மேலணை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.5 ஆயிரம் ஊக்கப் பரிசுத் தொகைகளை பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியக்கோட்டி, உதவி ஆணையர் (கலால்) திரு.வி.பழனிக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.